பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**25 03 2026** **6 45**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** மேற்கு ஆசிய நிலவரம் தொடர்பாக விவாதிக்க புதுதில்லியில் இன்று அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

**2.** நாட்டில் தேவையான அளவு உரங்களை முறையாக விநியோகிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**3.** தமிழகத்தில் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் தீவிரமாக செயல்படுத்தப்பட்டு கண்காணிப்புப் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

**4.** சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி திமுக கூட்டணியில் தேமுதிகவுக்கு **10** தொகுதிகளும், அஇஅதிமுக தலைமையிலான கூட்டணியில் தமாகா-வுக்கு **5** தொகுதிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

**5.** தேசிய உள்ளரங்கு தடகள போட்டியில் **Pole Vault**-ல் தமிழகத்தின் பரணிகா இளங்கோவன் தங்கப் பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மேற்கு ஆசிய நிலவரம் தொடர்பாக விவாதிக்க புதுதில்லியில் இன்று அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

அமெரிக்கா-இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே நடைபெற்று வரும் மோதலால் உலக அளவில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் குறித்து விவாதிக்க இக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக மேற்காசிய நிலவரம் குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி நேற்று மாநிலங்களவையிலும், நேற்று முன்தினம் மக்களவையிலும் உரை நிகழ்த்தினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் ஏற்கனவே ஆலோசனைக் கூட்டங்களும் நடைபெற்றன.

இந்நிலையில் அனைத்துக் கட்சிகளின் ஆலோசனைகளையும் பெறும் வகையில் இன்று இக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

நாட்டில் தேவையான அளவு உரங்களை முறையாக விநியோகிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த மத்திய உரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல், விவசாயிகளுக்கான உர தேவைகள் மாநிலங்கள் வாரியாக ஒவ்வொரு மாதமும் மதிப்பீடு செய்யப்படுவதாக கூறினார்.

இந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் உரங்களின் இருப்பு கண்காணிக்கப்பட்டு, வினியோகம் முறையாக மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்தார்.

தற்போது அனைத்து மாநிலங்களிலும் உரங்களின் இருப்பு போதுமான அளவு உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

மத்திய அரசின் இந்த நடவடிக்கைகள் தடையற்ற உர விநியோகத்தை உறுதி செய்திருப்பதாக திருமதி அனுப்பிரியா பட்டேல் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் தீவிரமாக செயல்படுத்தப்பட்டு கண்காணிப்புப் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இது தொடர்பாக மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்தபின் மாநிலம் முழுவதும் **7** லட்சத்திற்கும் மேற்பட்ட சுவர் விளம்பரங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் முக்கிய இடங்கள் மற்றும் சோதனைச்சாவடிகளில் **2** ஆயிரத்து **166** கண்காணிப்புக் குழுக்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் இதுவரை ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்ட **178** கோடி ரூபாய் பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் வாகன சோதனை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

சென்னையில் வாகன சோதனைகளின்போது நேற்று ஒரே நாளில் ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்ட 23 லட்சம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

வேலூர் மாவட்டம் கே.வி. குப்பம் பகுதியில் ஆந்திராவில் இருந்து வந்த நபர் ஒருவரிடம் உரிய ஆவணம் இல்லாமல் கொண்டு வரப்பட்ட 14 லட்சம் ரூபாய் மற்றும் 17 சவரன் நகை பறிமுதல் செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி திமுக மற்றும் அஇஅதிமுக தலைமையிலான கூட்டணிகளில் இடம்பெற்றுள்ள கட்சிகளுக்கு தொகுதிப் பங்கீடு தொடர்ந்து இறுதி செய்யப்பட்டு வருகிறது.

திமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள தேமுதிகவுக்கு 10 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான ஒப்பந்தம் திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலின், தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் ஆகியோருக்கு இடையே நேற்று கையெழுத்தானது.

இக்கூட்டணியில் இடம்பெற்றுள்ள மக்கள் நீதி மய்யம் கட்சி வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்று அறிவித்துள்ளது.

எனினும் திமுக தலைமையிலான கூட்டணிக்கு நிபந்தனையின்றி ஆதரவளிப்பதாக அக்கட்சியின் தலைவர் திரு. கமல்ஹாசன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அஇஅதிமுக தலைமையிலான கூட்டணியில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கு 5 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

பிஜேபி தமிழகப் பொறுப்பாளர் திரு. பியூஷ் கோயல், அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி ஆகியோருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது இந்த தொகுதிப் பங்கீடு இறுதி செய்யப்பட்டதாக தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் திரு. ஜி.கே. வாசன் தெரிவித்துள்ளார்.

இந்த 5 தொகுதிகளிலும் பிஜேபி சின்னத்தில் தமாகா போட்டியிடும் என்று திரு. ஜி.கே. வாசன் கூறியுள்ளார்.

அஇஅதிமுக தலைமையிலான கூட்டணியில் இடம்பெற்றுள்ள திரு. ஜான் பாண்டியனின் தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள **10** சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் **100** சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாவட்ட ஆட்சியர் திரு. பிரதாப் கூறியுள்ளார்.

பொன்னேரி மற்றும் பழவேற்காட்டில் நேற்று நடைபெற்ற வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

**(Voice Byte - Pratap - 50 Sec)**

<<<<>>>>

வாக்களிப்பதன் அவசியம் குறித்து திருப்பூர் அரசு கல்லூரியில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இது தங்களுக்கு பயனுள்ளதாகவும், விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் இருந்தது என இதில் பங்கேற்ற மாணவிகள் தெரிவித்தனர்.

**(Voice Byte - Students - 41 Sec)**

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஈராக்கின் எர்ஃபின் மாகாணத்தில் ஈரான் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 6 பேர் உயிரிழந்தனர். 30 பேர் காயமடைந்தனர்.

-----------

முதலாவது தில்லி சர்வதேச திரைப்படத் திருவிழா புதுதில்லியில் இன்று தொடங்கி வரும் 31ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

-----------

நடப்பு நிதியாண்டின் முதல் 3 காலாண்டுகளில் நாட்டின் ஏற்றுமதி, 5 புள்ளி இரண்டு ஆறு சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய வர்த்தகத்துறை இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா கூறியுள்ளார்.

-----------

பிரதமரின் சூரிய மின்சக்தி வீடுகள் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் இதுவரை 26 லட்சம் வீடுகளில் சூரிய சக்தி அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளதாக மத்திய மின்துறை இணையமைச்சர் திரு. ஸ்ரீபத் நாயக் தெரிவித்துள்ளார்.

-----------

பிஹார், உத்தரப்பிரதேசம், ஜார்கண்ட் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 15வது நிதிக்குழு மானியமாக 4 ஆயிரத்து 383 கோடி ரூபாயை மத்திய அரசு விடுவித்துள்ளது.

-----------

திருவண்ணாமலை மாவட்டம் கலசப்பாக்கத்தில் சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி துணை ராணுவத்தினரின் கொடி அணிவகுப்பு நடைபெற்றது.

-----------

100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி மதுரையில் மகளிர் சுய உதவிக் குழுவினரால் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

-----------

நகைகளுக்கான தர நிலைகள் குறித்து தர நிர்ணய அமைப்பின் சார்பில் கோவையில் நகை வணிகர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

-----------

நாகை அருகே சட்டவிரோதமாக மணல் கொள்ளையில் ஈடுபட்ட இருவரை காவல்துறையினர் கைது செய்தனர்.

-----------

சென்னையில் வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தை மாநகராட்சி ஆணையரும், மாவட்ட தேர்தல் அலுவலருமான திரு. குமரகுருபரன் தொடங்கி வைத்தார்.

-----------

*விளையாட்டுச் செய்திகள்*

தேசிய உள்ளரங்கு தடகள சாம்பியன் போட்டியில் Pole Vault-ல் தமிழகத்தின் பரணிகா இளங்கோவன் தங்கப் பதக்கம் வென்றார்.

புவனேஸ்வரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் அவர் 4 புள்ளி இரண்டு இரண்டு மீட்டர் கம்பு ஊன்றி தாண்டி இந்தப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

-------------

உத்தரப்பிரதேச மாநிலம் மீரட்டில் நடைபெற்ற அகில இந்திய அளவிலான பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மகளிர் செஸ் போட்டியில் சென்னைப் பல்கலைக்கழக அணி சாம்பியன் பட்டம் வென்றது.

**<<<<The End>>>>**